# பாரதிதாசன் நாடகங்களில் பெண் பாத்திரங்கள்

# Female Characters in Bharathidasan's Plays

***முனைவர் தோ. இராஜம்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நாகர்கோவில்,

***த. பச்சையம்மா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

## ஆய்வுச் சுருக்கம்

*மூடநம்பிக்கைகளாலும், சமூகக் கொடுமைகளாலும் இன்னலுற்ற பெண் குலத்தின் உரிமை வாழ்விற்காக தன் நாடகங்களில் பெண்களுக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளித்தவர் பாரதிதாசன்.*

*தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா ஆகியோரின் வரிசையில் வைத்து எண்ணப்படும் பாரதிதாசன் பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று போராடி வெற்றிக்கண்டவர். இதற்குப் பாரதிதாசன் ஆயுதமாகக் கொண்டவை தம்முடையப் படைப்புகளேயாகும்.*

*சமூதாயத்தில் எல்லா நிலைகளிலும் பெண்ணுரிமைச் சமத்துவம் நிலவினால் தான் சமுதாய உரிமைகள் காக்கப்படும் என்று புதிய நோக்கில் சிந்தித்து தம் படைப்புகளிலும், நாடகங்களிலும் பெண்ணுரிமையை வலியுறுத்தியுள்ளார். அவ்வாறே பெண் பாத்திரங்களும், படித்த பெண்களாகவும், புரட்சிப் பெண்களாகவும், வீரப்பெண்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.*

***முக்கியச்சொற்கள்:*** *பாரதிதாசன், மூடநம்பிக்கை, சமூகக்கொடுமை, பெண்ணுரிமை, பெண் சுதந்திரம்*

**Dr. T. Rajam**
*Assistant Professor, Tamil Department*
*Government Arts and Science College*
*Nagercoil*

**T. Pachaiyamma**
*Research Scholar*
*Department of Tamil*
*Annamalai University, Annamalai Nagar*

## Abstract

*Bharathidasan gave priority and importance to women in his plays for the sake of the rightful life of the women who suffered from superstitions and social evils. Bharathidasan, who is counted on the lines of Thanthai Periyar and Perarignar Anna, was successful in fighting for freedom for women. Bharathidasan's weapon for this is his own creations. In his works and plays, he has emphasised on women's rights, thinking in a new perspective that social rights can be protected only if there is equality of women's rights at all levels of society. Similarly, female characters are created as educated women, revolutionary women and heroic women.*

***Keywords:*** *Bharathidasan, Superstition, Social Evil, Women's Rights, Women's Freedom*

**Citation**

Rajam, T., and T. Pachaiyamma. “Female Characters in Bharathidasan’s Plays.” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 3, 2023, pp. 1–9.

**முன்னுரை**

*இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் தமக்கெனத் தனி இடத்தை ஏற்படுத்திக்கொண்டவர் பாரதிதாசன். தனிப்பாடல்கள், கதைப்பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள் திரைத்துறைப்படைப்புகள் போன்ற பல்வேறு இலக்கிய வகைகளிலும் பாரதிதாசன் தன் இலக்கிய ஆளுமையைக் கையாண்டுள்ளார். தான் ஒரு ஆணாக இருந்தாலும் பெண்களுக்குச் சமஉரிமை, சுதந்திரம், கல்வி, சுயமரியாதை போன்றவை வேண்டும் என்று ஓங்கி குரல் கொடுத்தவர் இவர். அதனால் தம் படைப்புகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். பெண்ணுரிமைக்கென கவிதைகள் பல இயற்றிய போதும் நாற்பதற்கும் மேற்பட்ட நாடகங்களையும் இயற்றியுள்ளார். தமது நாடகங்களில் பெண் பாத்திரங்களுக்குக் கொடுத்த முக்கியத்துவம் மிகச் சிறந்தது. ஆகையால் இதனை நோக்கி இக்கட்டுரை அமைகிறது.*

**நாடகமும் அவற்றின் விளக்கமும்**

*இயல், இசை, நாடகம் இவற்றில் ஆடல், கூத்து, அரங்கக்கலை, ஒப்பனை முதலான பல கலைகளையும் ஒன்று சேர்ந்த வடிவமாகத் திகழ்வது நாடகம். இந்நாடகத்தின் தோற்றத்தினைப் பலரும் பலவாறு மதிப்பிடுவர். ஆனால் அரிஸ்டாட்டில், ''போலச் செய்தல்'' தான் நாடகத்தின் தோற்றமாகக் குறிப்பிடுகிறார்.*

*இதன் அடிப்படையில் தான் நாடகமும் அனைத்து தரப்பு மக்களுக்கும் மகிழ்வளிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கிறது. இவை மட்டுமல்லாமல் பல்வகை கூத்துக்களின் வளர்ச்சியாக நாடகம் திகழ்கிறது என்ற கருத்தும் நிலவுகிறது. ''பொம்மைகளை வைத்து ஆட்டம் காட்டி மகிழ்வித்த மனிதன், பின்னர் தானே அரங்குகளில் ஆடினால் என்ன?'' என எண்ணியதின் விளைவாக நாடகம் தோன்றியது. எனவே, பல்வகைக் கூத்துக்களின் பரிணாம வளர்ச்சியே நாடகம்[1] எனக் கருதலாம். எவ்வாறாயினும் நாடகங்கள் பெரும்பாலும் சமுதாயக் கூட்டு முயற்சியின் விளைவாகத் தோன்றி வளர்ந்தவை என்று விளங்கிக்கொள்ள முடிகின்றது.*

**நாடகத்துறையில் பாரதிதாசனின் ஈடுபாடு**

*இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் இமயமெனத் திகழும் பாரதிதாசன் இயல், இசை, நாடகம் என்னும் முத்துறைப் புலமையாளராய் விளங்கினார். ''படித்த பெண்கள்'' என்னும் தம்முடைய நாடக முன்னுரையில், படித்த பெண்கள் இந்நாட்டிற்கு இன்றியமையாதவர்கள். பெண்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும். அவர்கள் ஆண்களோடு சரிநிகரானவர்கள் என்பதை எடுத்துக்கூற இதை எழுதினேன். நன்றாய் விளங்க வேண்டும் என்று இதை நாடகமாக அமைத்தேன்[2] என்றுதான் நாடகம் எழுதியதன் காரணத்தை தெளிவுபடுத்திய பாரதிதாசன் அவர்கள், சமூக முன்னேற்றத்தையே குறிப்பாக பெண்களின் முன்னேற்றத்தை தம் நாடகப் படைப்பின் காரணமாகக் குறிப்பிட்டிருப்பது சமூக நலனைத் தெளிவுறக் காட்டுவதாகும்.*

*மகாகவி பாரதியார் தான் எழுதிய ''சகுந்தலை'' நாடகத்தில் துஷ்யந்தனாகப் பாரதிதாசனை நடிக்க ஏற்பாடு செய்தார். ஆனால் நாடகம் அரங்கேற்றப்படவில்லை.[3] இருப்பினும் பாரதிதாசன் ஆசிரியராகப் பணியாற்றிய போது சிந்தாமணி, வீரத்தாய் ஆகிய தமது நாடகங்களில் மாணவர்களையே கொண்டு பள்ளி மேடைகளில் நடிக்கச் செய்தார்.*

*“காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே” என்று பெண்களை அழைத்தப் பாரதிதாசன் இந்தச் சமுதாயம் முழுவதும், பெண்களின் புகழ் பரவ வேண்டும் என்ற நோக்கில் அவரது நாடகங்களில் பெண்பாத்திரங்களின் பங்களிப்பினைத் தந்துள்ளார்.*

*இவரின் நாடகங்களில் பெண்களின் காதல்வாழ்வு, கற்பு, கலைகளின் மீது பெண்கள் கொண்டுள்ள ஈடுபாடு, பிற நாடகப்பாத்திரங்களுடன் உரையாடும் விதம், அவர்களின் வீரம், நாடகங்களில் பெண்கள் தங்கள் பங்களிப்பினை நிறைவேற்றுதல் போன்றவற்றைக் காணமுடிகின்றது. அவற்றுள் சான்றாகச் சில:*

**தமிழச்சியின் கத்தி**

*பாரதிதாசனின் சிறப்பு மிகுந்த நாடகங்களில் ஒன்று “தமிழச்சியின் கத்தி” தன் வீட்டிற்கு வரும் விருந்தினரை வரவேற்பவன் தமிழன். சாவா மருந்தெனினும் வந்தவர்கள் பசித்திருக்கவாயில் இடமாட்டான் தமிழன் இது பண்டையக்காலம் தொட்டே இருந்து வரும் பண்பாகும்.*

*அவ்வகையில் இந்நாடகத்தில் “திம்மன்” என்னும் பாத்திரத்தின் வாயிலாக, குளிர்ந்த இளநீர் கொடுத்து உபசரித்த நிகழ்வைப் பாரதிதாசன் காட்டியுள்ளார். இவை மட்டுமன்றி, நாடகத்தில் வரும் திம்மனின் மனைவியான “சுப்பம்மா”வை எம்மனிதனையும் ஈன்ற பிள்ளையாக நினைக்கும் பண்புடையவளாகப் படைத்தளித்துள்ளார். இச்சிறந்தப் பண்புடையவளானச் “சுப்பம்மா”வுக்கும் ஆபத்து நேரிடுகின்றது.*

*இந்நாடகத்தில் வரும் “சுதரிசன்சிங்” என்னும் ஆடவன் சுப்பம்மா மீது ஆசைக் கொள்கிறான். பல்வேறு சூழ்ச்சிகள் செய்து அவளை அடைய விரும்புகிறான். சுதரிசன்சிங் சுப்பம்மாவை தன் வலையில் விழ வைக்க முதலில் அவன் கணவனிடம் சிப்பாய் வேலை வாங்கித் தருவதாகக் கூறி செஞ்சிக்கு வரவழைக்கிறான். கணவனின் சொல்லைத் தவிர்க்க முடியாமல் சுப்பம்மாவும் உடன் செல்லுகிறாள். செல்லும் வழியில் எதிர்வரும் கூட்டத்தினரிடமிருந்து ஒரு கூரிய கத்தி ஒன்றைப் பெற்று தன் பாதுகாப்பிற்காக வைத்துக் கொள்கிறாள். தமிழ்மொழியை இகழ்கின்றான். தமிழர்தம்மைத் தாழ்ந்தவர் என நினைக்கின்றான். தமிழ்ப் பெண்டிர் தமது நலம் கெடுக்கின்றான். தன் நாட்டாரைத் தான் உயர்வாய் நினைக்கின்றான்என்று எதிர்வரும் வேற்று கூட்டத்தார் கூறுவதை இருவருமே கேட்கின்றனர். சுப்பம்மா உடன்வர மறுக்கின்றாள். பின்னர் திம்மனின் பிடிவாதத்தால் சுப்பம்மாவும் செஞ்சியைச் சென்றடைகின்றாள்.*

*சுப்பம்மாவை தன்வசம் செய்ய எண்ணிய சுதரிசன்சிங் தன் நண்பர்களான குப்பு, முருகி என்ற இரு பெண்களின் துணையை நாடுகின்றான். கொடியவன் சுதரிசன்சிங் சுப்பம்மாவை நெருங்கி அணைக்க முற்படுகையில் அவள் தன் கையில் உள்ள கத்தியால் தாக்கியபோதும் அவன் தப்பித்து ஓடிவிடுகிறான். மீண்டும் அவளைக் குடிசைக்குள் வைத்து குடிசையை எரிய வைத்து அதன் மூலம் அவளை அடைய முற்படுகின்றான். ஆனால் சுப்பம்மா எரிந்து சாம்பலாகவும் தாயாராக இருந்தாளே தவிர அந்தக் கொடியவனுக்கு இரையாக எண்ணவில்லை.*

***'கத்தியை நீட்டினாள் தீ என்னை வாட்டினாலும் நீ***
***கையைத் தொடாதே யடா! இந்த***
***முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி***
***மூச்சு பெரிதில்லை காண்'[4]***

*என்று கூறி சுப்பம்மா ஆவேசத்துடன் கத்தியை கையில் ஏந்தி நின்றாள். எனினும், குப்பு, முருகி ஆகிய கொடியவர்களின் சூழ்ச்சியால் சுப்பம்மா, சுதரிசன் சிங்கிடம் தன் கற்பினை இழக்கின்றாள். மயக்கம் தெளிந்து தன் நிலை அறிந்த சுப்பம்மா தன்னை இவ்வாறு செய்த கொடியவனைக் "கொல்வேன்" என்று சூளுரைத்து சுதரிசன் சிங்கைக் கொன்று விடுகிறாள். இறுதியாக மன்னனின் கொடிய தண்டனைக்கு ஆளாகும் முன், "மூளுதடா என் நெஞ்சில் தீ! தீ! உன்றன்முடிவேக மூளுதடா அக் கொடுந்தீ! நீளுதடா என்நெஞ்சில் வாள்! வாள்! உன்றன் நெடு வாழ்வை வெட்டுதடா அந்தக் கூர்வாள்! நாளில் எனைப் பிரிக்குதடா சாவு!" என்று அந்த தமிழச்சி தன்னைத்தானே கத்தியால் குத்திக்கொண்டு உயிர்துறக்கிறாள்.*

*மானம் அழிந்தபின் உயிர்வாழ்வை வாழாத உன்னதத்தைக் கொண்டிருந்தத் தமிழச்சியைத் தமிழுலகிற்குத் தந்துள்ளார் பாரதிதாசன்! நாடகம் ஒரு நுண்கலை. மனதிற்கு இன்ப மூட்டுவதில் அதற்கிணை எதுவுமில்லை[5] என்றும் உள்ளத்தில் தோன்றும் உணர்வினை வெளிப்படையாகக் கொண்டுவர துணைபுரிவது நாடகம் என்பதற்கும், நாடகத்தின் உயர்ச்சிக்கு இவ்வாறான பாத்திரப்படைப்பே முதன்மையான அடிப்படையான நிலைத்த கூறு என்பதற்கும் மேற்கண்ட நாடக வரிகளும், பாத்திரங்களும் சான்றுகாட்டத்தக்கதாகும்.*

*இந்த நாடகத்தின் மூலம் தம் நாட்டுக்கும், தமிழ்ப் பெண்ணுக்கும் மானம் பெரிது என்பதைக் காட்ட நெருப்பைப் பற்றவைத்த போதுகூட "கையைத் தொடாதேயடா" என்றத் துணிவைப் பாரதிதாசன் அன்றி யவராலும் தரமுடியாது. கூரை எரிந்தது, 'கொள்ளிகள் வீழ்ந்தன' என தீயால் வாடியபோதும் வாடாத வீரம்தான் தமிழ்ப் பெண்ணின் வீரம் என்பதை சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார் பாரதிதாசன்.*

**வீரத்தாய்**

*தமிழச்சியின் கத்தியைப் போன்றே வீரமும் உறுதியும் அமைந்த மற்றொரு நாடகம் "வீரத்தாய்" என்பதாகும். பெண்ணின் வீரத்திற்கு முடிசூட்டுவதாய் இந்நாடகத்தினைப் படைத்துள்ளார் பாரதிதாசன்.*

*உலகத்தார் விரும்பும் முறையில் தெளிந்த அறிவுடன் படைக்கப்பட்டவள் கதைத் தலைவியான மன்னி விஜயராணி, அரசனின் மனைவியாக படைக்கப்பட்டு, கவிஞர் உள்ளத்தில் உருக்கொண்டு பெண்ணின் பெருமையை வெளிக்காட்டியது வீரத்தாய் நாடகம்.*

*மணிப்புரி நாட்டின் இளவரசனான சுதர்மனைக் கல்வியறிவற்றவனாக வளர்த்து அவனை வீழ்த்திடக் கருதியிருக்கும். சேனாதிபதியின் திட்டங்களை மன்னி விஜயராணி தவிடுபொடியாக்குகிறாள்.*

*காட்டுப்பகுதியில் வாழும் காளிமுத்துவிடம் ஒப்படைக்கப்பட்ட தன் மகன் சுதர்மனுக்குத் தான் யார் என்பதைத் தெரிவிக்காமலேயே மன்னி விஜயராணி கிழவேடம் புனைந்து மறப்போர்*

*வகைகளையும், வளர்கலைகளையும் கற்பிக்கின்றாள். மன்னி விஜயராணி வீரத்தில் சிறந்தவளாக பாரதிதாசனால் படைக்கப்பட்டுள்ளாள்.*

***'ஆடை அணிகலன் ஆசைக்கு***
***வாசமலர்***
***தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்***
***திருப்பதுவும்***
***அஞ்சுவதும் நாணுவதும்***
***ஆமையைப்போல் வாழுவதும்***
***கெஞ்சுவது மாகக் கிடக்கும்***
***மகளிர்குலம்***
***மானிடத்தின் கூட்டத்தில் வலிவற்ற***
***ஓர் பகுதி'*** [6]

*என்று சேனாதிபதியாகிய ஆண்மகன் பெண்ணைப் பற்றி மேற்கண்டவாறு பேசுவதாகப் படைக்கப்பெற்ற இவ்வரிகள் ஆணினத்தின் மொத்த கருத்தாகப் பிரிதிபலித்துள்ளது. நாடகத்தின் தொடக்கத்தில் பேசப்பெற்ற இவ்வரிகளை, நாடக முடிவில்,*

***நீரன்றோ அன்னையார்! நீரன்றோ***
***வீரியார்!***
***ஆர் எதிர்ப்பார் அன்னையார்***
***அன்புவெறி தன்னை*** [7]

*என்று புகழவைத்துள்ளார் பாரதிதாசன். இதுமட்டுமல்லாமல்,*

***அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்***
***என்னும்படி அமைந்தீர்! இப்படியே***
***பெண்ணுலகம்***
***ஆகுநாள் எந்நாளோ? அந்நாளே!***
***துன்பமெல்லாம்***
***போகுநாள் இன்பம் புதியநாள்***
***என்னுரைப்பேன்!***
***அன்னையென்னும் தத்துவத்தை***
***இப்புவிக்குக் காட்டவந்த***
***மின்னே! விளக்கே! விரிநிலவே***
***வாழ்த்துகின்றேன்*** [8]

*என வாழ்த்திப் பாடும் பாங்கில் அமைந்திருக்கின்றது, பாரதிதாசனின்வீரத்தாய் நாடகம்.*

*தீயவர்களுக்குப் பெண்ணினம் கொடுமையானது என்றும் பெண்ணினத்தை எளிதாக எடைப்போட்டுவிடக்கூடாது என்பதற்கும் இவைகளேச் சான்றாகும்.*

*பாத்திரங்களின் வாயிலாக வீர உணர்ச்சியை ஊட்டும் வரிகளை எழுதுவதில் பாரதிதாசனுக்கு இணையாகத் தமிழ் இலக்கியம் முழுவதும் யாரும் இல்லை[9] என்னும் கருத்தை மெய்ப்பித்துள்ளார் பாரதிதாசன். சூழ்ச்சியால் ஆட்சியைக் கைப்பற்றும் படைத்தலைவனைத் தோற்கடித்து அறிவுத்திறனாலும், மன உறுதியினாலும் வெற்றிக்கொள்ள முடியும் என்பதையும் இந்நாடகத்தில் விஜயராணி பாத்திரத்தின் மூலம் பதிவு செய்துள்ளார். பாரதிதாசன் படைக்கும்*

*பெண், புதுமை பூத்த பழைய தமிழச்சி. அவள் நல்ல கதை பேசும் நாகரீகம், தீயவரைக் கொல்ல விழியெறியும் கொற்றவையும் ஆவாள்*[10] *எனப் பாரதிதாசன் படைக்கும் பெண் பாத்திரங்களைக் குறித்து சாலை இளந்திரையரின் கருத்தினையும் இங்கு ஒப்பிட்டுக் காட்டுதல் நலம்.*

**படித்த பெண்கள்**

*மேற்கண்ட நாடகங்களைப் போன்றே மற்றொரு நாடகம் படித்த பெண்கள்.*

***பொற்றாலியோடு எவையும்போம் ஏன்? அவள் படித்தவள். தன் துணைவனுக்கு நற்றுணையாய் இருந்தவள். உயிரின் இயற்கையாகிய காதல் வீணைக்குக் கன்னவிசை. உடலுக்குயிர் ஆதலால் படித்த பெண்கள் இந்நாட்டிற்கு இன்றியமையாதவர்கள். பெண்கள் அனைவரும் படிக்க வேண்டும். அவர்கள் ஆண்களோடு சரி நிகரானவர்கள் என்பனவற்றை விளக்க இதை எழுதினேன். நன்றாய் விளங்க வேண்டும் என்று நாடகமாக அமைத்தேன்***[11]

*என்று பாரதிதாசன் தன் முன்னுரையில் பெண்கள் படிப்பதன் முக்கியத்துவத்தைத் தெரிவித்துள்ளார். மேலும் பெண்களுக்குக் கல்வி வேண்டும், எத்துறையிலும் பெண்களுக்கு விடுதலை வேண்டும் என்னும் ஆணையை பொன்னன் என்னும் பாத்திரம் வாயிலாக பிரசாரம் செய்யவைப்பது குறிப்பிடத்தக்கது. மேலும், கல்வி கற்ற பெண்கள் நன்றாகத் திருத்தப்பெற்ற கழனியை ஒப்பர். அங்கு உயர்ந்த நெல்மணி போன்ற மக்கள் தோன்றுவர் என்பதுடன், பெண்கல்வியை விரும்பிய பாரதிதாசனின் உயர்ந்த குறிக்கோளை விளக்கும் படைப்பாகப் படித்த பெண்கள் என்னும் உரைநடை நாடகநூல் விளங்குகிறது.*

*படித்த பெண்களின் பிரதிநிதியாக மின்னொளி என்னும் சீரிய கதைத் தலைவியை இந்நாடகத்தில் உருவாக்கியுள்ளார் பாரதிதாசன். புதுவையில் வட்டிக்கடை நடத்திவந்த பொன்னன் என்பவன் படித்த பெண்ணாகிய மின்னொளியை திருமணம் செய்துகொள்கிறான். மது, மாது, குதிரைப் பந்தயம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு அலைந்து திரியும் பொன்னனைத் திருத்தி நல்ல நிலைக்குக் கொண்டு வருகிறாள் மின்னொளி. அவளுக்குத் துணையாக அவளது தமக்கை இன்னமுது இருக்கின்றாள். இங்ஙனம் கணவனின் கீழான எண்ணங்களை நீக்கும் மேலான படித்த பெண்களாகக் கதைத் தலைவியும் அவள் தமக்கையும் விளங்குகின்றனர்.*

*பாரதிதாசன் கண்ட பெண்கள் மூடப்பழக்கங்களை ஏற்காதவர்கள். பெண்ணுரிமையை மற்றவர்கள் தரும் வரை அவர்கள் காத்திருப்பது இல்லை. பெண்கள் கல்வி அறிவு பெற்றிருந்தால் நல்ல செயல்களை தானே முடிவெடுத்து செய்து முடிப்பர் என்பதை "படித்த பெண்கள்" என்ற நாடகத்தில் மின்னொளி பாத்திரப்படைப்பின் மூலம் படைத்துக் காட்டியுள்ளார் பாரதிதாசன்.*

*இந்நாடகத்தில் பல்வேறு சுவைகள் பின்னிப்பிணைந்துள்ளன. இது நடித்தற்கேற்ற முறையில் அமைந்துள்ளதால் நகைச்சுவையும் இந்நாடகத்தில் காணப்படுகிறது.*

**கழைக் கூத்தியின் காதல்**

*சாதிமத வேறுபாடுகளும், ஏழை, செல்வந்தன் முதலிய வேறுபாடுகளும் மறைய வேண்டும் என்னும் நோக்கில் இந்நாடகம் படைக்கப்பட்டிருந்தாலும், காதல் உணர்வு எல்லோருக்கும் பொதுவானது என்பதைப் பறைசாற்றி இருக்கிறது. தொண்டை நாட்டின்*

ஒரு பகுதியை வள்ளல் சடையநாதன் ஆண்டு வந்தான். அவனைக் கழை கூத்தாடும் "முத்துநகை" விரும்பி தன் காதலில் வெற்றி அடைவது தான் இக்கதை. முத்துநகை விச்சுளி என்னும் ஆட்டத்திலும் சிறந்தவள்.

முத்துநகை, வள்ளி ஆகியோர் இந்நாடகத்தில் ஆண்வேடம் புனைகின்றனர். இவள், "ஆண்டியப்பன் என்னும் பெயரில் 18-ஆம் காட்சி முதல் 27-ஆம் காட்சி வரையில் அரசனோடு உறைகிறாள். அரசன் முன்னிலையில் பெண்ணாக இருந்து செயல்படுவதிலுள்ள சிக்கலைக் கருதி அவனைத் திருத்தும் எண்ணத்துடன் அவள் மாறுவேடம் கொண்டாள்"[12] என ச.சு. இளங்கோ அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். கழைக் கூத்தியின் காதலில் புரட்சிக் கருத்துக்களை ஏற்றுத் திருந்திய அரசன் அம்மகிழ்ச்சி நாளை, கூத்தினால் நிறைவு செய்கிறான். இந்நாடகத்தின்மூலம் சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது சாதி ஏற்றத்தாழ்வு என்பதை உணர்த்தியவர் பாரதிதாசன். காதல் மணத்தால் கலப்பு மணத்தால் மட்டுமே இந்த ஏற்றத்தாழ்வை நீக்க முடியும் என்று நினைத்தார்.[13] அதனால் தாழ்ந்த குடியினளாகிய கழைக்கூத்தாடி ஒருத்தி நாட்டு மன்னவன் - உயர்குடிப் பிறப்பினன் - சடையநாத வள்ளலைக் காதலித்து மணப்பதாக இந்நாடகத்தை அமைத்தார். இந்நாடகத்தில் "முத்துநகை" பெண் கதாபாத்திரம் உண்மையும், தூய்மையான காதலும் கொண்டவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

**முடிவுரை**

பாரதிதாசன் கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் எனத் தமிழ் இலக்கியத்தில் பல வகை நூல்கள் எழுதி பன்முகங்களில் வெளிப்பட்டாலும், பாவேந்தர் என்று அனைவராலும் பாராட்டப்பெற்றவர். அவர் பாவேந்தர் என்று போற்றப்பட்டாலும் தமிழுலகிற்கு அவர் ஈந்த நாடகங்கள் பலப்பல. நாடக ஆசிரியர்களில், "கவிதை நாடகம்" எழுதுவோர் மிகக் குறைவு. கவிதை நாடகம் எழுதுவோர் "உரைநடை நாடகம்" எழுதும் ஆற்றல் குறைவாகவே பெற்றிருப்பர். ஆனால் பாரதிதாசனைப் போன்று ஒரு சிலர் மட்டமே இவ்விருவகை நாடகங்களையும் எழுதமுடியும். வெற்றிபெறவும் முடியும். ஆனால் பாரதிதாசன் தான் படைத்த பல்வேறு நாடகங்களிலும் தமிழச்சியின் கத்தி, வீரத்தாய், படித்த பெண்கள், கழைகூத்தியின் காதல் போன்ற நாடகங்கள் மிகவும் சிறப்புபெற்று திகழ்கின்றன.

பெண்களின் முன்னேற்றத்திற்கும், பெண்ணினத்தின் புகழைப் பறைசாற்றுவதற்கும் பல்வேறு கவிஞர்களும், தலைவர்களும் தோன்றினாலும் பாரதிதாசனின் பெண் முன்னேற்றப் படைப்புகள் சமுதாயத்தில் உயர்ந்து நிற்கின்றன. அவருடைய பெண் பாத்திரங்கள் கதைகளில் மட்டுமல்ல உண்மையிலேயே உயர்ந்த நடைபோடும் கதை மாந்தர்கள். பாரதிதாசனின் நாடகங்களில் பெண் பாத்திரங்கள் பெண் இனத்தின் உயர்வினையும் சிறப்பினையும் உலகறிய பறைசாற்றியது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**சான்றெண் விளக்கம்**

1. மறைமலைஅடிகள், சாகுந்தல நாடக ஆராய்ச்சி, ப. 8.
2. பாரதிதாசன், படித்தபெண்கள் 3-ஆம் பதிப்பு, ப. 37.
3. பாரதிதாசன், தேச பக்தர்கள் நாடகம், ஹிந்துஸ்தான் அரசியல் கலை இலக்கிய இதழ், 10.09.1983.
4. பாரதிதாசன், தமிழச்சியின் கத்தி, ப. 21.

5. முனைவர் ஆறு. அழகப்பன், தமிழ் நாடகத்தின் தோற்றமும், வளர்ச்சியும்,ப. 103.
6. பாரதிதாசன், வீரத்தாய், காட்சி-1, ப. 15.
7. பாரதிதாசன், வீரத்தாய், காட்சி-10, ப. 25.
8. பாரதிதாசன், வீரத்தாய், காட்சி-10, ப. 26.
9. ஆர்.கே. கண்ணன், பாரதிதாசன் தொடர் கட்டுரை, தாமரை இதழ், ப. 9.
10. சாலை இளந்திரையன், புரட்சிக்கவி ஓர் கவிதை வளம், ப. 277.
11. படித்த பெண்கள் - 2-ம் பதிப்பு, நான் என்ன சொல்கிறேன், ப. 414.
12. ச.சு. இளங்கோ, பாரதிதாசன் நாடகங்கள் - ஓர் ஆய்வு, ப. 383.
13. சரளா ராசகோபாலன், பாரதிதாசன் நாடகங்கள் - ஓர் பார்வை,ப. 115.

**References**

1. *Maraimalai Adigal, Shakuntala Nadaga Araichi, p. 8.*
2. *Bharathidasan, Paditha Pengal, 3rd edition, p. 37.*
3. *Bharathidasan, Desapakthargal Nadagam, Hindustan Political Arts and Literature Journal, 10.09.1983.*
4. *Bharathidasan, Thamizhachiyin Kathi, p. 21.*
5. *Dr. Six. Azhagappan, The origin and development of Tamil drama. 103.*
6. *Bharathidasan, Veerathai, Scene-1, p. 15.*
7. *Bharathidasan, Veerathai, Scene-10, p. 25.*
8. *Bharathidasan, Veerathai, Scene-10, p. 26.*
9. *R. K. Kannan, Bharathidasan Series Article, Thamarai Magazine, p. 9.*
10. *Salai Ilanthiraiyan, Puratchi Kavi oru Kavitha Valam, p. 277.*
11. *Paditha Pengal – 2nd Edition, Nan Enna Solgiren, p. 414.*
12. *S.S. Ilango, Bharathidasan's Nadagangal – Or Ayivu, p. 383.*
13. *Sarala Rajagopalan, Bharathidasan Nadagangal – Or Parvai, 115.*